සියලු ම හිමිකම් ඇවිරිණි]
(முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கை பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**இலங்கை புகையிரத திணைக்களத்தின் புகையிரத நிலைய அதிபர் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான திறந்த எழுத்துமூலப் போட்டிப் பரீட்சை - 2019 (2021)**

Open Competitive Examination for Recruitment to the Post of Station Master Grade III in Sri Lanka Railway Department - 2019 (2021)


**(01) மொழித்திறன்**
Language Skills

*ஒரு மணித்தியாலம் முப்பது நிமிடம்*
*One hour and thirty minutes*

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்**

மிக முக்கியம் :

விடை எழுதுவதற்கு பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.



✻ விடை எழுதும்போது பின்வரும் முறையில் இலக்கங்களை எழுதுமாறு அறிவுறுத்தப்படுகின்றீர்கள்.

0 1 2 3 4 5 6 7 8 9

உமது சுட்டெண்ணை இங்கேயும் மூன்றாம் பக்கத்திலுள்ள புள்ளிக்கோட்டின்மீதும் எழுதுக.

..................................

சுட்டெண் சரியானது என உறுதிப்படுத்துகின்றேன்.

..................................
நோக்குநரின் சிற்றொப்பம்

முக்கியம் :

✻ இவ்வினாத்தாள் **08** பக்கங்களில் **4** வினாக்களைக் கொண்டுள்ளது.

✻ எல்லா வினாக்களுக்கும் **இத்தாளிலேயே** விடை எழுதுக.

✻ உமக்குத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப விடைகளை எழுதுக. அறிவுறுத்தல்களுக்கு அமையாத விடைகளுக்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

✻ விடைகள் எழுதப்படாவிட்டாலும் இவ்விடைத்தாளை மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும்.

✻ உங்கள் விடைகளை தெளிவாக நீல அல்லது கறுப்பு நிறப் பேனையினால் மாத்திரம் எழுதுக. பென்சிலைப் பயன்படுத்த வேண்டாம்.

✻ இவ்வினாத்தாளைப் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லல், அதனை நிழற்பிரதி (photocopy), புகைப்படம் எடுத்தல் என்பன குற்றமாகும்.

✻ தெளிவற்ற இலக்கம், தெளிவற்ற கையெழுத்துகள், அழிக்கும் வெண்மைப் பயன்பாடு, பென்சிலைப் பயன்படுத்தி எழுதப்பட்ட விடைகள் ஆகியவற்றைக் கொண்டுள்ள விடைத்தாள்கள் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படமாட்டாது.

**பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்**

| வினா எண் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 1 | |
| 2 | |
| 3 (i) | |
| 3 (ii) | |
| 4 | |
| மொத்தம் | |

**இறுதிப் புள்ளிகள்**

| | |
|---|---|
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | | |
|---|---|---|
| விடைத்தாளை | புள்ளியிட்டவர் | |
| | பரீட்சித்தவர் | |
| | | |
| பிரதம பரீட்சகர் | | |

[பக். 2 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

சுட்டெண் :..............................

[பக். 4 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

Department of Examinations Sri Lanka

**3.** பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதனூடாகத் தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றும்,

**ஆம்** எனின் இலக்கம் **1** எனவும்
**இல்லை** எனின் இலக்கம் **2** எனவும்
**நிச்சயமற்றது** எனின் இலக்கம் **3** எனவும்

ஒவ்வொரு கூற்றுக்கும் எதிரேயுள்ள அடைப்புக்குறிக்குள் உள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

(*30 புள்ளிகள்*)

(i) இலங்கைக்கு, வண. ஜேம்ஸ் கோடினரின் வருகை, கோயிற்பற்றுப் பாடசாலைகளைத் திருத்தியமைக்கும் முயற்சியின் ஆரம்பநிலை எனக் குறிப்பிடலாம். கொழும்புக் கோட்டைக் காவற்படைக்குத் தலைமைக் குருவாகச் சேவை செய்வதற்கென கோடினர் என்பார் நோர்த் தேசாதிபதி அவர்களால் இலங்கைக்கு வரவழைக்கப்பட்டார். எனினும், அவர் வந்து சேர்ந்த பின்பு, "அனைத்துப் பாடசாலைகளுக்கும் அத்தியட்சகராகவும் பாடசாலை ஆசிரியர் பதவிப் பரீட்சார்த்திகளைப் பரீட்சிப்பவராகவும்" மேலதிக கடமை ஏற்றார். அவர், எப்போதும் "பாடசாலைகளின் அதிபர்" எனக் குறிப்பிடப்பட்டார். இந்நாட்டில் இவர் தங்கியிருந்த காலம் முழுவதுமே இப்பதவியை வகித்தார். 1803 இல் இலண்டன் மிசனரிச் சங்கப் பாதிரிமார்களின் வருகையோடு "சுதேசிகளின் பொதுக் கல்விக்கு" அவர்களின் உதவியைப் பெற்றுக்கொள்வதற்கு நோர்த் தேசாதிபதிக்கு முடியுமாக இருந்தது. ஆகையால், கோடினரைப் பாடசாலைகளின் அதிபராக நியமித்ததுடன் இந்நாட்டில் அரசாங்கப் பாடசாலை முறை ஆரம்பமானது.

கோயிற்பற்றுப் பாடசாலைகளை நல்ல நிலைக்குக் கொண்டு வருவதற்காகக் கோடினர் எடுத்த முதல் நடவடிக்கை, பாடசாலை ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்க வேண்டுமெனத் தேசாதிபதியை வேண்டிக்கொண்டதாகும். ஒவ்வொரு பாடசாலைக்கும் எட்டு "ரிக்ஸ் தொலர்கள்" (Rix Dollars) சம்பளமாகக் கொடுக்கப்பட வேண்டுமென்று கோடினர் விதப்புரை செய்தார். தேசாதிபதி இவ்வேண்டுகோளுக்கு இணங்கினார். இவ்வாறு அவர் செய்தமையால் அரசாங்கம், பாடசாலைளுக்குப் பண உதவி அளிக்கும் வழக்கத்தை ஏற்படுத்தியது. கொடுக்கப்பட்ட பண உதவி மிகச் சிறியது என்பது உண்மையேயெனினும், பண உதவி அளிக்கும் முறைமை இதனோடு ஆரம்பமாயிற்று. பாடசாலை ஆசிரியர்கள் திருமணப் பதிவாளர்களாகச் செயற்பட்டு அது தொடர்பான அறிக்கைகளை எழுதிப் பாடசாலையில் வைத்திருக்கப்படுவதும் ஒல்லாந்தராட்சியில் வழக்கமாயிருந்தவாறே தொடர்ந்து நடைபெற்று வந்தன.

கோயிற்பற்றுப் பாடசாலைகளைப் புனர்நிர்மாணம் செய்வதற்கு எடுக்கப்பட்ட இரண்டாவது நடவடிக்கை, பாடசாலைகளில் நடைபெறும் வேலையை மேற்பார்வை செய்வதற்காகப் பிரசங்கிமாரையும், உபதேசிமாரையும் நியமித்தமையாகும். ஒவ்வொரு பிரதான பட்டணத்திலும் ஒவ்வொரு பிரசங்கியை நியமிப்பது எனத் திட்டமிடப்பட்டது. கொழும்பு, நீர்கொழும்பு, சிலாபம், புத்தளம், மன்னார், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் அங்குள்ள கிறித்தவக் குடியானவர்களுக்கு மதகுருவாகக் கடமையாற்றுவதற்கெனப் பிரசங்கி ஒருவர் இருந்தார் எனக் கோடினர் குறிப்பிட்டுள்ளார். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் இப்பிரசங்கியார் தமது வட்டாரத்து ஆலயம் ஒன்றில் ஆராதனை நடத்த வேண்டும். அத்தோடு உபதேசகரினதும் பாடசாலை ஆசிரியரினதும் நடத்தை, திறமை என்பவற்றைப் பரீட்சிக்கவும் வேண்டும். தாம் பரீட்சித்து, பாடசாலைகளில் வேலை எவ்வாறு நடைபெறுகிறது என்பது குறித்து பாடசாலைகளின் அதிபருக்கு அறிக்கை சமர்ப்பிக்கவும் வேண்டும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

கோயிற்பற்றுப் பாடசாலைகளிற் பெரும்பான்மையானவை ஒல்லாந்தராற் கட்டப்பட்ட கட்டடங்களில் நடைபெற்றன. கோயிற்பற்றுப் பாடசாலையொன்றின் ஆசிரியர் தொகை பெரும்பாலும் பாடசாலையின் அளவிற்கேற்ப ஒன்று தொடக்கம் நான்கு வரை வேறுபட்டுக் காணப்பட்டது. ஒருவருக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் இருந்தபோது, பொதுவாக, அவர்களுள் வயதிற் கூடியவர் பாடசாலை அதிபராகக் கடமையாற்றினார். பாடசாலையின் பொதுவான நிருவாகத்திற்கும், அரசாங்கத்தின் சார்பாகப் பாடசாலைப் பதிவேடுகளை வைத்திருப்பதற்கும், தலைமையாசிரியர் பொறுப்பாக இருந்தார். இவர் ஒல்லாந்தரின் கோயிற் பாடசாலைகளிலுள்ள தோம்புப் பதிவாளருக்குச் சமமானவர்.

கோயிற்பற்று பாடசாலையின் பாடவிதானம் வாசிப்பு, எழுத்து, எண்கணிதம், சமயம் என்பவற்றை உள்ளடக்கி இருந்தது. இவை யாவும் மாணவரின் தாய்மொழியிற் கற்பிக்கப்பட்டன. வாசிப்பு பாடம் விவிலிய வேதத்தை வாசிப்பதாகவே இருந்தது. கோயிற்பற்றுப் பாடசாலைகளைப் புனருத்தாரணம் செய்ததன் நோக்கம் "சமய அறிவை வளர்ப்பது ஆகும்." பாடவிதானத்திற் சமய போதனை முக்கிய இடத்தைப் பெற்றது. ஆண், பெண் இருபாலருக்கும் கல்வி போதிக்கப்பட்டபோதிலும், பொதுவாக, ஆண் பிள்ளைகளிலும் குறைந்த அளவு பெண் பிள்ளைகளே பாடசாலைக்குச் சென்றனர். இவை, கிராமவாசிகளிடையே சுயமொழிக் கல்வியைப் பரப்பிய சுயமொழிப் பாடசாலைகளாகும்.

பிரித்தானியர் நடாத்திய கோயிற்பற்றுப் பாடசாலைகள், ஒல்லாந்தருடைய கோயிற்பற்றுப் பாடசாலைகளைப் போலன்றி, மாணவரின் வரவைக் கட்டாயப்படுத்தவில்லை. மாணவர் பாடசாலைக்கு வரவேண்டும் எனக் கட்டாயப்படுத்தும் சட்டம் எதுவும் இல்லாததாற் பொதுவாக மிகக் குறைந்த மாணவர் வரவே காணப்பட்டது. இதனைத் தீர்க்குமுகமாகத் தேசாதிபதி அரசாங்கச் செய்தி மடலில் இவ்வாறு ஆணை விடுத்தார்.

"எல்லாப் புரட்டசுத்தாந்துக் கிறித்தவப் பெற்றோரும் தம் பிள்ளைகளைச் சட்டப்படி நிறுவப்பட்டுள்ள பாடசாலைகளுக்கு அனுப்ப வேண்டும். முதிலியாரும் கிராமத் தலைவரும் இக்கட்டளை நிறைவேற்றப்படுவதைக் கவனிக்க வேண்டும்.

[பக். 6 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

என்பவரால் விரிவுபடுத்தப்பட்ட முதற் கொள்கை இடர்பாடுகள் பலவற்றைத் தருவதாகும். அரப்பாவிற் காணக்கிடைக்கும் 270 குறிகளையும் உச்சரிப்பு முறையை நாம் அறியும்வரை, அவற்றை ஓரளவு ஒத்துள்ள பன்னிரு பிராமி வடிவெழுத்துக்களும் அவற்றினின்றும் பெறப்பட்டவையெனக் கொள்வது பொருந்தாது. அரப்பாக்குறிகள் மிகப் பலவாதலின், அவற்றுட் சிலவும் பிராமியெழுத்துக்களும் ஒற்றுமையுடையனவாய் இருப்பது இயல்பே. ஆயின், 22 எழுத்துக்களையே கொண்டுள்ள பழைய வட செமிற்றிக்கு வரிவடிவிற்கும் பிராமியெழுத்துக்குமிடையே காணப்படும் ஒற்றுமையோ, எளிதாகக் ஒதுக்கிவிடக் கூடியதன்று; கூர்ந்து கவனிக்கற் பாலது. எனினும், இவ்வொற்றுமையும் தீர்க்கமான ஒரு முடிவு காண்பதற்கு உறுதியான சான்றாகாது. எனவே, இப்பிரச்சினையானது தொடர்ந்து ஆராய்வதற்குரியது.

பிராமி எழுத்துக்கள் இடமிருந்து வலமாக ஐரோப்பிய வரிவடிவுகள் போல் வாசிக்கப்படுதல் வழக்கு, ஆனால் செமிற்றிக்கு வரிவடிவுகளோ வலமிடமாக வாசிக்கப்படுவன. ஆந்திரோவிலே எற்றகுடியில் மிகப் பழுதற்ற நிலையிற் காணப்படும் அசோகன் கல்வெட்டுக்களும் மிகப் பழைய ஒரு சிங்களக் கல்வெட்டும் மத்தியப் பிரதேசத்தில் ஈரானிற் கிடைத்த பழைய நாணயமொன்றும் வலமிருந்து இடமாக வாசித்தற்குரியவை. இவ்வாறே பிராமியும் வலமிடமாக ஆதியில் வாசிக்கப்பட்டதாகலாம். செமிற்றிக்குச் சார்பிலே பிராமி தோன்றிய தெனுங் கொள்கைக்கு இதுவும் தக்க சான்றாகாது. அரப்பா வரிவடிவம் வலப்புறமிருந்து இடப்புறமாக வாசிக்கப்பட்டதென நம்பப்படுகின்றதற்கு இடமுண்டு.

பிராமியின் ஆதித் தோற்றம் எவ்வாறிருப்பினும், இந்திய மொழிகளின் ஒலி முறைக்கேற்பப் பிராமி நன்கமைந்திருப்பதனால் அதன் வளர்ச்சி மனித முயற்சியாலும் ஓரளவிற்கு ஊக்கம் பெற்றிருத்தல் வேண்டும். அம்மொழி இன்று எய்தியுள்ள வடிவிற்கு வேதங்களின் ஒலியியலை ஓரளவறிந்திருந்த புலவரோ பார்ப்பனரோ காரணராய் இருத்தல் வேண்டும். எனினும், ஆதியில் அது செமிற்றிக்கு எழுத்துக்களின் வடிவங்களாலோ அரப்பா வரிவடிவின் சார்பினாலோ தூண்டப்பட்டு, வணிகத்துக்குரிய ஒரு நெடுங்கணக்காய்த் தொடங்கியிருக்கலாம். ஆனால், அசோகன் காலத்தளவிலே, அது முற்றிய செம்மையடையாவிடினும் திட்டமான முறையினமைந்த சீரான ஒரு வரிவடிவாய் வளர்ந்துவிட்டது.

(அ) மனிதர்களிடையே பேச்சு வழக்கு ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் எழுத்து வழக்கு ஆரம்பிக்கப்பட்டதாக இப்பந்திகளின் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது. (..................)

(ஆ) சேர். அலெட்சாந்தர் கன்னிங்காம் மற்றும் பேராசிரியர் எசு. இலாந்தன் போன்றோரின் கொள்கையாக விளங்கியது, அசோகன் எழுத்து முறைமையானது அரப்பா எழுத்து முறையிலிருந்து உருவாக்கிக்கொள்ளப்பட்டது என்பதாகும். (..................)

(இ) பிராமிய எழுத்துக்களின் தொடக்கம் தொடர்பாக நடைமுறையிலுள்ள அரப்பா மற்றும் செமிற்றிக் தொடர்பான கருத்தியல் விமர்சனங்களை நோக்கும்போது வாசிப்பவர் இடர்ப்படுவர் போலத் தோன்றுகின்றது. (..................)

(ஈ) வாசித்தற் முறைக்கேற்ப ஐரோப்பிய மற்றும் பிராமி எழுத்துக்கள் சமமானவையாகும். (..................)

(உ) சில இந்தியர்கள் அசோக எழுத்துக்கள் செமிற்றிக் எழுத்துக்கள் முறையிலிருந்து உருவாக்கப்பட்டுள்ளன என எண்ணுகின்றார்கள். (..................)

(ஊ) வலது புறத்திலிருந்து இடது புறமாகவும் இடது புறத்திலிருந்து வலது புறமாகவும் வாசிக்கும் எழுத்துமுறை இருந்ததெனக் குறிப்பிடுவது என்னவெனில், வேறுபட்ட வாசிப்பு முறைக்கான எழுத்துக்கள் உலகத்தில் இருக்கலாமென்ற சந்தேகம் வாசிப்பவருக்கு இருந்திருக்கலாம் என்பதினாலாகும். (..................)

(எ) அரப்பா குறியீடுகளின் உச்சரிப்பு எவ்வாறானது என கண்டுபிடிக்கப்படவில்லை. (..................)

(ஏ) செமிற்றிக் எழுத்துக்கள் இடது புறத்திலிருந்து வலது பக்கமாக வாசிக்கப்படுகின்றன. (..................)

(ஐ) அசோகக் கல்வெட்டு எழுத்து முறைமை ஆரம்பிக்கப்பட்டது அசோகன் காலத்திற்கு முன்பிலிருந்து ஆகும். (..................)

(ஒ) சில விடயங்களை அடிப்படையாகக் கொண்டு அசோகன் எழுத்துக்களின் ஆரம்ப முறை வலது புறத்திலிருந்து இடது புறமாக வாசித்தல் என எண்ணுவதற்கு இடமுண்டு. (..................)

[பக். 8 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka